செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்.70/2023 நாள் : 07.09.2023

## சென்னை குடிநீர் வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் அனைத்து திட்டப் பணிகளையும் தொடர்புடைய சேவைத் துறைகளுடன் ஒருங்கிணைந்து விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

## மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் அறிவுறுத்தல்

இன்று (07.09.2023) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமையில் சென்னை குடிநீர் வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

<u>**இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:–**</u>

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு பூண்டி, சோழவரம், செங்குன்றம், செம்பரம்பாக்கம், கண்ணன்கோட்டை-தேர்வாய்கண்டிகை மற்றும் வீராணம் ஆகிய ஏரிகளிலிருந்தும், மீஞ்சூர், நெம்மேலியில் செயல்பட்டுவரும் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் மூலமும் நாளொன்றுக்கு 1000 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம்

85 இலட்சம் பொதுமக்கள் பயன் பெற்று வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சீரான முறையில் பொதுமக்களுக்கு தினசரி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் நிறைவு கட்டப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.08.2023 அன்று பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். இப்பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக கழிவுநீர் குழாய் வழித்தடங்களில் தூர் வாரும் பணிகளும், கசடுகள் அகற்றும் பணிகளும் மேற்கொள்ளப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்யவேண்டும். தூர்வாரும் பணிகள் அனைத்தும் உரிய பாதுகாப்பு உபகரணங்களோடு இயந்திரங்களைக் கொண்டு மட்டுமே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும், 2011ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான மணலி, மாதவரம், வளசரவாக்கம், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் குடிநீர் திட்டப் பணிகளும், பாதாள சாக்கடை திட்டப்

பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டப் பணிகள் அனைத்தும் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடித்திட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளையும், மழைநீர் வடிகால் பணிகளின் இணைப்புப் பணிகளையும் விரைந்து முடித்திட வேண்டும். நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் பணிகளையும், மழைநீர் வடிகாலில் தூர்வாரும் பணிகளையும், நீர்நிலைகளை தூர்வாரும் பணிகளையும், வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக முடித்திட வேண்டும். மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளும் இடங்களில் கண்டிப்பாக உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். மக்களுக்கு எவ்வித நெருக்கடியுமின்றி பணிகளை செய்திட வேண்டும். வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளையும் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

மழைநீர் வடிகால் மற்றும் பாதாள சாக்கடை உள்ளிட்ட சேவைத் துறைகளால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்காக மேற்கொள்ளப்படும் சாலை வெட்டுக்களை பணிகள் முடிவுற்றவுடன் உடனடியாக சீரமைத்திட வேண்டும். நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத் துறை, மின் துறை, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ இரயில், உள்ளிட்ட தொடர்புடைய சேவைத் துறைகளுடன் ஒருங்கிணைந்து திட்டப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகள் தெரிவிக்கின்ற கோரிக்கைகளை நிறைவேற்றிட உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ் குமார், அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு.ஜெ.இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.இரா.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.சுதர்சனம், திரு.ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர், மண்டலக் குழுத்தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், கூடுதல்/இணை/துணை ஆணையர்கள், சென்னை குடிநீர் வாரியத்தின் செயல் இயக்குநர், நிதி இயக்குநர், பொறியியல் இயக்குநர், தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், பகுதி அலுவலர்கள், பகுதிப் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவு நீரகற்று வாரியம்